**Saidai Sa. Duraisamy's**
**Manidhanaeyam Free IAS Academy**
**(Run by Manidha Naeyam Charitable Trust)**
**28, 1st main Road, CIT Nagar, Chennai-35 (HO)**
**A-Block Old No.A9 New No. A 41, 6th Street,**
**Anna Nagar East, Chennai – 600 102**
**E Mail Address : anmanidhanaeyam@gmail.com**
**Website : saidais.com**

*Booklet Series* **A** Register Number

# GROUP – 2A

## SAMACHEER BOOKS: 9th Tamil & Current Affairs: March 2017

**[Time Allowed : 2 Hours]** **TEST-6** **[Maximum Marks: 125]**

**Read the following instructions carefully before you begin to answer the questions.**

## IMPORTANT INSTRUCTIONS

1. This Booklet has a cover (this page) which should not be opened till the invigilator gives signal to open it at the commencement of the examination. As soon as the signal is received you should tear the right side of the booklet cover carefully to open the booklet. Then proceed to answer the question.
2. This Question Booklet contains 125 questions.
3. Answer **all** questions. **All** Questions carry equal marks.
4. The Test Booklet is printed in **'A'** series booklet, he/she has to indicate in the side 2 of the Answer Sheet with Blue or Black Ink Ball point pen as follows:

   A [A] [B] [C] [D]

5. You must write your Register Number in the space provide on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
6. An Answer Sheet will be supplied to you separately by the invigilator to mark the answers. You must write your Name, Register No. and other particulars on side 1 of the Answer Sheet provided, failing which your Answer sheet will not be evaluated.
7. You will also encode your Register Number, Subject Code etc., with Blue or Black Ink Ball Point Pen in the space provided on the side 1 of the Answer Sheet. If you do not encode properly or fail to encode the above information. Your Answer Sheet will not be evaluated.
8. Each question comprises *four* response [A], [B], [C] and [D]. You have to select ONLY ONE correct response and mark in your Answer Sheet. In case you feel that there are more than one correct response, mark the response which you consider the best. In any case, choose ONLY ONE response for each question. Your total marks will depend on the number of correct responses marked by you in the *Answer Sheet.*
9. In the Answer Sheet there are **four** brackets [A], [B],[C] and [D] against each question. To answer the questions you are to mark with Ball point pen ONLY ONE bracket of your choice for each question. Select one response for each question in the Question Booklet and mark it in the Answer Sheet. If you mark more than one answer for one question, the answer will be treated as wrong. E.g. If for any item, [A] is the correct answer, you have to mark as follows:

   [A] [B] [C] [D]

10. You should not remove or tear off any sheet from this Question Booklet. You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Hall during the examination. After the examination is concluded, you must hand over your Answer Sheet to the invigilator. You are allowed to take the Question Booklet with you one after the Examination is over.
11. The sheet before the last page of the Question Booklet can be used for Rough Work.
12. In all matters and in cases of doubt, the English Version is final.
13. Do not tick-mark or mark the answer in the Question Booklet.

**Saidai Sa. Duraisamy's**
**Manidhanaeyam Free IAS Academy**
**(Run by Manidha Naeyam Charitable Trust)**
**28, 1st main Road, CIT Nagar, Chennai-35 (HO)**
**A-Block Old No.A9 New No. A 41, 6th Street,**
**Anna Nagar East, Chennai – 600 102**
**E Mail Address : anmanidhanaeyam@gmail.com**
**Website : saidais.com**


**வினாத்தாள் வரிசை** **A** **பதிவு எண்**

## குரூப்- 2A

## சமச்சீர் புத்தகம்: 9ம் வகுப்பு – தமிழ் மற்றும் நடப்பு நிகழ்வுகள்: மார்ச் 2017

## தேர்வு-6

**[ அனுமதிக்கபட்டுள்ள நேரம்: 2மணி ]** **[ மொத்த மதிப்பெண்கள் : 125]**

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத் தொகுப்பு ஒரு மேலுறையை (இந்த பக்கத்தை)க் கொண்டுள்ளது. தேர்வு தொடங்கும் நேரத்தில் வினாத்தொகுப்பைத் திறக்கும்படி கண்ணகாணிப்பாளர் கூறும் வரையில் மேலுறையைத் திறக்கக் கூடாது. வினாத்தொகுப்பைத் திறக்கும்படியான செய்கை கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றவுடன் மேலுறையின் வலதுபுறத்தை கவனமாக கிழித்துத் திறக்க வேண்டும். அதன்பின் கேள்விகளுக்கு விடையளிக்கத் தொடங்கலாம்.
2. இந்த வினாத் தொகுப்பு *125* வினாக்களைக் கொண்டுள்ளது.
3. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை
4. வினாத் தொகுப்பு **A** என்ற ஒரு வரிசையில் அச்சிடப்பட்டுள்ளது. (இந்த பக்கத்தின் இடது மேல் மூலையில் உள்ள கட்டத்தைப் பார்க்கவும்) விண்ணப்பதாரர் வினாத்தாள் வரிசையை விடைத்தாளில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் குறித்துக் காண்பிக்க வேண்ம். உதாரணமாக ஒரு விண்ணப்பதாரர் **A** என்னும் வினாத் தொகுப்பு பெற்றிறருந்தால அவர்அதை தன்னுடைய விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் கீழே காண்பித்துள்ளவாறு நீலம் அல்லது கருமை நிறமையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்ட வேண்டும்.

   A [A] [B] [C] [D]

5. உங்களுடைய பதிவு எண்ணை இந்துப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும் வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
6. விடைகளைக் குறித்துக் காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு கண்காணிப்பாளரால் தனியாகத் தரப்படும். விடைத்தாளின் முதல் பக்கத்தில் உங்களுடைய பதிவு எண், பெயர் மற்றும் கேட்டுள்ள விபரங்களை நீங்கள் எழுத வேண்டும்: தவறினால் உங்களது விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
7. உங்களுடைய பதிவு எண், தேர்வுத்தாள் எண் முதலியவற்றையும் விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அவைகளுக்காக அமைந்துள்ள இடங்களில் நீலம் அல்லது கருமை நிறமையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்ட வேண்டும். மேற்கண்ட விபரங்களை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் உங்கள் விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
8. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில், ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதை கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்கவேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
9. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைக்கட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக் நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு விடைக்கட்டத்தில் மட்டும் பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்கவேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாக கருதப்படும். ஊதாரணமாக நீங்கள் என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக்காட்ட வேண்டும்.

   [A] [B] [C] [D]

10. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துக் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
11. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
12. மேற்கண்ட விதிகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.
13. ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள்தான் முடிவானதாகும்.
14. வினாத் தொகுப்பினல் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது

**1. நான் நிரந்தமானவன் அழிவதில்லை எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை என்று கூறியவர்.**

(A) பெருஞ்சித்திரனார் (B) கண்ணதாசன்
(C) முடியரசன் (D) ந. பிச்சமூர்த்தி

**2. அறிஞர் அண்ணா, அவர்களை "தமிழ் நாடகக் கலைக்கு ஒரு பெர்னாட்ஷா" எனப் பாராட்டியவர்.**

(A) கண்ணதாசன் (B) கல்கி
(C) முடியரசன் (D) வாணிதாசன்

**3. பெரும்பான்மை பொது அறக்கருத்துகளும் சிறுபான்மை சமண அறக்கருத்துகளும் இடம்பெற்ற நூல்**

(A) மணிமேகலை (B) சிறுபஞ்சமூலம்
(C) புறநானூறு (D) குறுந்தொகை

**4. கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானவை**

I. திராவிடம் என்னும் சொல்லை முதன்முதலில் உருவாக்கியவர் கால்டுவெல்
II. இந்திய நாட்டை, "மொழிகளின் காட்சி சாலை" எனக் குறிப்பிட்டவர் ச.அகத்தியலிங்கம்.
III. திராவிடம் என்னும் சொல்லை பயன்பாட்டுக்குக் கொண்டு வந்தவர் குமரிலப்பட்டர்
IV. தமிழ் ►திரமிள ►திரவிட ►திராவிட என உருவாயிற்று எனக் கூறியவர் ஈராஸ் பாதிரியார்.

(A) I, II & III சரியானவை (B) I, II & IV சரியானவை
(C) அனைத்தும் சரியானவை (D) II & IV சரியானவை

**5. 'கல்லைப் பிசைந்து கனியாக்கும் செந்தமிழின் சொல்லை மணியாகத் தொடுத்தவனும் நீதானோ' எனத் தாலாட்டு பாடியவர் யார்?**

(A) கல்யாணசுந்தரம் (B) இராமலிங்கனார்
(C) தேசிய விநாயகனார் (D) பாரதிதாசன்

**6. கொல்லா நலத்து நோன்மை பிறர்தீமை சொல்லா நலத்தது சால்பு- என்றக் குறளில் பயின்று வந்துள்ள அணி எது?**

(A) எடுத்துக்காட்டு உவமை அணி (B) ஏகதேச உருவக அணி
(C) வேற்றுப் பொருள்வைப்பணி (D) இல்பொருள் உவமையணி

**7. "பெண்ணுரிமை என்பது ஆணுடன் போர் புரிவதன்று. ஆணுடன் வாழ்நது அன்பை வளர்ப்பது பெண்ணின் உரிமைக்கடன்" இதை யார் கூறியது?**

(A) மு.வரதராசன் (B) திரு.வி. கல்யாணசுந்தரனார்
(C) இராமலிங்கம் பிள்ளை (D) பெரியார்

**8. சுரதாவின் கவிதை நூல்கள் அல்லாததைத் தேர்ந்தெடு?**

(A) துறைமுகம் (B) சுவரும் சுண்ணாம்பும்
(C) தமிழ்த்தேன் மலர் (D) தேன்மழை

**9. நக்கீரர் இயற்றிய நூல் எது?**

(A) நெடுநல்வாடை, பரிபாடல் (B) கலித்தொகை, நெடுநல்வாடை
(C) திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை (D) அகநானூறு, திருமுருகாற்றுப்படை

**10. குறுந்தொகை எத்தனை அடிகளைக் கொண்டது?**

(A) 4 முதல் 8 அடிகள் கொண்டது (B) 4 அடிகள் கொண்டது
(C) 4 முதல் 6 அடிகள் கொண்டது (D) 6 அடிகள் கொண்டது

**11. பொருத்துக**

| **பட்டியல் I** | **பட்டியல் II** |
|---|---|
| (a) தொழிற்பெயர் | 1. நன்றி |
| (b) முதனிலை திரிந்த தொழிற்பெயர் | 2. அகழ்வார் |
| (c) பண்புப்பெயர் | 3. சூடு |
| (d) வினையாலணையும் பெயர் | 4. வருதல் |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (A) | 4 | 2 | 1 | 3 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

**12. வல்லினம் மிகும் இடம் பற்றிய தவறான கூற்று எது?**

(A) வன்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.
(B) இருபெயரொட்டுப் பண்புத் தொகையில் வல்லினம் மிகும்.
(C) நான்காம் வேற்றுமைவிரியில் வல்லினம் மிகும்.
(D) உம்மைத் தொகையில் வல்லினம் மிகும்.

**13. நேர் நிரை நேர் - எவ்வகை காய்ச்சீர் எனக் காண்க.**

(A) புளிமாங்காய் (B) கருவிளங்காய்
(C) கூவிளங்காய் (D) தேமாங்காய்

**14. அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
**வற்றல் மரந்தளிர்த் தற்று - இவ்வகையில் பயின்றுள்ள அணி எது?**

(A) எடுத்துக்காட்டு உவமையணி (B) இல்பொருள் உவமையணி
(C) வேற்றுப்பொருள் வைப்பணி (D) ஏகதேச உருவக அணி

**15. பொருத்துக**

| **பட்டியல் I** | **பட்டியல் II** |
|---|---|
| (a) ‘பாடு’ எனக்கூறியவுடன் பாடுபவர் | 1. மதுரகவி |
| (b) சொல்லணி அமைத்துச் சுவை வளம் செழிக்கப்பாடுபவர் | 2. வித்தாரக்கவி |
| (c) தொடர்நிலைச் செய்யுளும், தூய காப்பியமும் இயற்றுபவர் | 3. சித்திரக்கவி |
| (d) செவிக்கினிய ஓசை நலம் சிறக்கப் பாடுபவர் | 4. ஆசுகவி |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 1 | 3 | 2 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

**16. சாதுவன் வாணிகம் செய்யும் பொருட்டுக் கடல்கடந்து சென்ற குறிப்பு ________ இல் உள்ளது.**

(A) சிலப்பதிகாரம் (B) குண்டலகேசி

(C) மணிமேகலை (D) வளையாபதி

**17. "எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதனை முழு மூச்சாகக் கொண்டு, வடமொழிச் சொற்கள் கலவாமல் தூய தமிழிலேயே பேசவும் எழுதவும் வேண்டும்", என வற்புறுத்தியவர்.**

(A) பாரதிதாசன் (B) மு.வரதராஜன்
(C) திரு.வி. கல்யாணசுந்தரனார் (D) பரிதிமாற் கலைஞர்

**18. "இந்த நாட்டில் சொன்னபடி செய்ய ஆள் இல்லை. ஆனால், கண்டபடி சொல்ல ஆள் ஏராளம். ஒவ்வொருவரும் ஆணை இடுவதற்கு விரும்புகிறார்", என்று கூறியவர்**

(A) விவேகானந்தர் (B) திரு.வி. கல்யாண சுந்தரனார்
(C) பெரியார் (D) மு. வரதராசனார்

**19. பொருத்துக:**

(a) நவ்வி — 1. சொரி
(b) முகில் — 2. மான்
(c) புனல் — 3. மேகம்
(d) உகு — 4. நீர்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 2 | 4 | 3 | 1 |

**20. "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி", என்று கூறும் நூல்.**

(A) தொல்காப்பியம் (B) புறப்பொருள் வெண்பாமாலை
(C) புறநானூறு (D) அகநானூறு

**21. "நான் தனியாக வாழவில்லை: தமிழோடு வாழ்கிறேன்", எனக் கூறியவர்.**

(A) தேவநேயப்பாவாணர் (B) திரு.வி.கல்யாணசுந்தரனார்
(C) பாரதிதாசன் (D) மு.வரதராசன்

**22. "பைந்தமிழ் ஆசான்" எனப் போற்றப்படுபவர் யார்?**

(A) கா. நமச்சிவாயனார் (B) வள்ளலார்
(C) அண்ணாதுரை (D) கண்ணதாசன்

**23. கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானவை**

I. ப், ம் - மேல் உதடும் கீழ் உதடும் பொருந்த இவை தோன்றும்.
II. த், ந் - மேல் வாய்ப் பல்லின் அடியை நாக்கின் நுனி பொருந்துவதால் இவ்வெழுத்துக்கள் தோன்றுகின்றன.
III. வ் - இது கீழ்வாய்ப் பல்லைக் கீழுதடு பொருந்துவதனால் பிறக்கின்றது.
IV. ட், ண் - இவை நாவினது நுனி, அண்ணத்தின் நுனியைத் தொடுவதனால் தோன்றுகின்றன.

(A) I, II & III சரியானவை (B) I, II & IV சரியானவை
(C) II, III & IV சரியானவை (D) அனைத்தும் சரியானவை

**24. படி – என்ற அடிச்சொல்லுக்கு வினையெச்சம் காண்க.**

(A) படித்தான் (B) படித்து
(C) படித்தல் (D) படித்த

**25. எதிர்கால இடைநிலைகள் எவை?**

(A) இல், அல் (B) த, ட், இன்
(C) ப், வ் (D) கிறு, கின்று

**26. இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்**
**வன்மை மடவார்ப் பொறை - இக்குறளில் பயின்று வந்த அணி எது?**

(A) வேற்றுப் பொருள் வைப்பணி (B) இல்பொருள் உவமையணி
(C) எடுத்துக்காட்டு உவமையணி (D) ஏகதேச உருவக அணி

**27. கீழ்க்காணும் கூற்றுகளில் தவறானதை தேர்ந்தெடு.**

I. இருபதாம் நூற்றாண்டின் உரைநடைவளத்தைக் கருத்திற் கொண்டு நோக்கும் போது இக்காலத்தை உரைநடைக் காலம் எனலாம்.
II. 'கல்லைப் பிசைந்து கனியாக்கும் செந்தமிழின் சொல்லை மணியாகத் தொகுத்தவனும் நீதானா? எனத் தாலாட்டு பாடியவர் - நாமக்கல் கவிஞர்.
III. கவிமணியின் கவிதைகளில் காந்தியச் சிந்தனைகள் மிளிர்கின்றன.
IV. அமெரிக்கக்கவிஞர் வாட்விட்மனின் சாயலில் பாரதிதாசன் வசன கவிதை எழுதினார்.

(A) I, II & III சரியற்றவை (B) I, II & IV சரியற்றவை
(C) II, III & IV சரியற்றவை (D) II & IV சரியற்றவை

**28. "தேனாறு பாயுது செங்கதிரும் சாயுது**
**ஆனாலும் மக்கள் வயிறு காயுது", என்ற எழுச்சிப் பாடலை பாடியவர்**

(A) நாமக்கல் கவிஞர் (B) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
(C) பாரதிதாசன் (D) பாரதியார்

**29. நிரை நேர் நிரை – எவ்வகை கனிச்சீர் எனக் காண்க**

(A) தேமாங்கனி (B) புளிமாங்கனி
(C) கூவிளங்கனி (D) கருவிளங்கனி

**30. திருவள்ளுரைப் படித்துப்பார் -இதில் வந்துள்ள ஆகுபெயரை குறிப்பிடுக.**

(A) கருவியாகு பெயர் (B) கருத்தாகு பெயர்
(C) காரியாகு பெயர் (D) உவமையாகு பெயர்

**31. கீழ்க்காணும் கூற்றுகளில் சரியான கூற்றைத் தேர்ந்தெடு.**

I. அடிதோறும் இருசீர்களைப் பெற்றுவருவது குறளடி எனப்படும்
II. அடிதோறும் நான்கு சீர்களைப் பெற்று வருவது அளவடி அல்லது நேரடி எனப்படும்.
III. அடிதோறும் ஐந்து சீர்களைப் பெற்று வருவது சிந்தடி எனப்படும்.
IV. அடிதோறும் ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட பல சீர்களைப் பெற்று வருவதனைக் நெடிலடி எனக்கூறுவர்.

(A) I, II & III சரியானவை (B) I, II & IV சரியானவை

(C) I & II சரியானவை (D) II & IV சரியானவை

**32. ‘எனக்கு மிக விருப்பமான இலக்கியம் ஒன்று உண்டென்றால் அது கலிங்கத்துப் பரணியே”, இது யாரால் சொல்லப்பட்டது?**
(A) கல்கி (B) சுரதா
(C) பேரறிஞர் அண்ணாதுரை (D) கண்ணதாசன்

**33. இந்திய நாட்டை “மொழிகளின் காட்சிச்சாலை” எனக் குறிப்பிட்டவர் யார்?**
(A) கால்டுவெல் (B) ச. அகத்தியலிங்கம்
(C) ஈராஸ் பாதிரியார் (D) குமரிலபட்டர்

**34. “உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே”, என்று கூறும் நூல்கள் யாவை?**
(A) மணிமேகலை, கலித்தொகை (B) மணிமேகலை, அகநானூறு
(C) புறநானூறு, மணிகேமலை (D) புறநானூறு, திருமந்திரம்

**35. தீயினால் சுட்ட புண் உள்ளாரும் ஆறாதே நாவினால் சுட்ட வடு – என்றக் குறளில் பயின்று வந்த அணி எது?**
(A) எடுத்துக்காட்டு உவமையணி (B) வேற்றுமையணி
(C) வேற்றுப் பொருள்வைப்பணி (D) ஏகதேச உருவக அணி

**36. பொருத்துக**

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (a) வெகுளல் | 1. பெருவிருப்பம் |
| (b) புரைதீர் | 2. புறங்கூறல் |
| (c) குறளை | 3. குற்றம் நீங்கிய |
| (d) வெ.ஃ.கல் | 4. சினத்தல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

**37. ‘பசிப்பிணி என்னும் பாவி’ என்று கூறும் நூல் எது?**
(A) அகநானூறு (B) சிலப்பதிகாரம்
(C) புறநானூறு (D) மணிமேகலை

**38. திரு.வி.கலியாணசுந்தரனாருக்கு வாய்த்த மொழிநடை மலை எனத் தமிழுலகில் ஓங்கி உயர்ந்துள்ளது என்பார்.**
(A) தேவநேயப்பாவாணர் (B) மு. வரதராசன்
(C) பரிதிமாற்கலைஞர் (D) தொ.பொ.மீனாட்சி சுந்தரனார்.

**39. ‘தமிழ் நாடகக் கலைக்கு ஒரு பெர்னாட்ஷா’ அழைக்கப்படுபவர் யார்?**
(A) பரிதிமாற்கலைஞர் (B) சங்கரதாஸ் சுவாமிகள்
(C) அண்ணாதுரை (D) கல்கி

**40. கண்ணதாசன் தொடங்கிய இதழ்கள் அல்லாதது**

(A) தென்றல் (B) தமிழ்மலர்
(C) முல்லை (D) தமிழ்த்தேன் மலர்

**41. பொருத்துக**

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (a) "எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும்" | 1. பாரதிதாசன் |
| (b) "பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும்" | 2. கவிமணி |
| (c) "சபைகளிலே தமிழெழுந்து முழங்க வேண்டும்" | 3. நாமக்கல் கவிஞர் |
| (d) "எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டோ" | 4. கண்ணதாசன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 4 | 1 | 3 | 2 |

**42. "கரிகாலனின் முன்னோர் காற்றின் போக்கை அறிந்து கலம் செலுத்தினர்", என்பதை கூறும் நூல்**
(A) மதுரைக்காஞ்சி (B) புறநானூறு
(C) பட்டினப்பாலை (D) அகநானூறு

**43. "தமிழுக்குத் தொண்டுசெய்வோன் சாவதில்லை" – என்று கூறியவர்**
(A) பாரதியார் (B) பாரதிதாசன்
(C) அண்ணா (D) கண்ணதாசன்

**44. பின்வருவனவற்றுள் எவர் மணிக்கொடி என்னும் இதழில் புதுக்கவிதை எழுதாதவர்.**
(A) கு.ப. இராசகோபாலன் (B) க.நா. சுப்பிரமணியன்
(C) சி.சு. செல்லப்பா (D) புதுமைப்பித்தன்

**45. "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற நூலை எழுதியவர்**
(A) ஜி.யு.போப் (B) கால்டுவெல்
(C) வீரமாமுனிவர் (D) எல்லீஸ்

**46. தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்**
**வானம் வழங்கா தெனின். இவற்றில் பயின்று வந்துள்ள மோனை எது?**
(A) ஒரூஉ மோனை (B) மேற்கதுவாய் மோனை
(C) கூழை மோனை (D) கீழ்க்கதுவாய் மோனை

**47. பொருத்துக**

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (a) இயல்பு புணர்ச்சி | 1. கற்கோட்டை |
| (b) தோன்றல் விகாரம் | 2. மரவேல் |
| (c) கெடுதல் விகாரம் | 3. வாழைப்பழம் |
| (d) திரிதல் விகாரம் | 4. பொன்வளையல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 3 | 1 | 2 | 4 |

| | | | | |
|---|---|---|---|---|
| (C) | 4 | 3 | 2 | 1 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

**48. கீழ்க்காணும் கூற்றுகளில் சரியான கூற்றைத் தேர்ந்தெடு.**

I. நீங்கள் என்னும் முன்னிலைப் பன்மைப் பெயர் வேற்றுமை உருபேற்கும் போது நுங்கள், உங்கள் என மாறுபடும்.

II. நீ என்னும் முன்னிலைப் பெயர் வேற்றுமை உருபேற்கும்போது நின் எனவும் உன் எனவும் மாறுபடும்.

III. தான் என்னும் படர்க்கை ஒருமைப் பெயர் வேற்றுமை உருபேற்கும் போது தன் என மாறும்.

IV. தாங்கள் என்னும் படர்க்கைப் பெயர் தம்மை எனத் திரியும்.

(A) I, II & III சரியானவை (B) I, III & IV சரியானவை
(C) II & IV சரியானவை (D) I & III சரியானவை

**49. பொருத்துக**

| **பட்டியல் I** | **பட்டியல் II** |
|---|---|
| (a) ஒற்றளபெடை | 1. குடிதழீஇ |
| (b) செய்யுளிசை அளபெடை | 2. அரங்ங்கம் |
| (c) இன்னிசை அளபெடை | 3. உழாஅர் |
| (d) சொல்லிசை அளபெடை | 4. உடுப்பதூஉம் |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

**50. இறந்தகால இடை நிலையைக் குறிப்பிடுக.**

(A) இன் (B) இல் (C) அல் (D) கிறு

**51. கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு – என்ற குறளில் இடம்பெற்ற அளபெடையைக் குறிப்பிடுக.**

(A) சொல்லிசை அளபெடை (B) இசைநிறை அளபெடை
(C) உயிரளபெடை (D) ஒற்றளபெடை

**52. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது - இச் செய்யுளில் வருகின்ற பொருள்கோளைக் கூறு.**

(A) ஆற்றுநீர்ப்பொருள்கோள் (B) நிரல்நிறைப்பொருள்கோள்
(C) மொழிமாற்றுப் பொருள்கோள் (D) விற்பூட்டுப் பொருள்கோள்

**53. காலை மாலை உலாவி நிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத் தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே – என்ற பாடலை பாடியவர்**

(A) திருமூலர் (B) திரு.வி.க
(C) தேசிய விநாயகம் பிள்ளை (D) மு.வரதராசனார்

**54. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)**
**ஐந்து சால்(பு) ஊன்றிய தூண் - என்ற திருக்குறளில் பயின்று வந்துள்ள அணி**

(A) எடுத்துக்காட்டு உவமையணி (B) ஏகதேச உருவக அணி
(C) நிரல்நிரை அணி (D) இல்பொருள் உவமையணி

**55. கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானவை**

I. பரணிக்கோர் சயங்கொண்டார் எனப் பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் பாராட்டியுள்ளார்.
II. ஆயிரக்கணக்கான யானைகளைப் போரில் கொன்ற வீரனைப் புகழ்ந்துபாடும் இலக்கியத்திற்குப் பரணி என்று பெயர்.
III. கலிங்க மன்னன் காரவேலன் மீது முதல் குலோத்துங்கச் சோழன் போர் தொடுத்து வெற்றி பெற்றதன் காரணமாக கலிங்கத்துப்பரணி இயற்றப்பட்டது.
IV. சயங்கொண்டாரின் சமகாலப் புலவரான கம்பர் இந்நூலைத் தென்தமிழ்த் தெய்வப்பரணி எனப் புகழ்ந்தார்.

(A) I, II & III சரியானவை (B) I, III & IV சரியானவை
(C) I & II சரியானவை (D) அனைத்தும் சரி

**56. “நான் தனியாக வாழவில்லை: தமிழோடு வாழ்கிறேன்” எனக் கூறியவர்**

(A) மு. வரதராஜன் (B) திரு.வி. கல்யாணசுந்தரனார்
(C) பெருஞ்சித்திரநார் (D) பரதிமாற்கலைஞர்

**57. அழக்கொண்ட எல்லாம் அழப்போம்,**
**இழப்பினும் பிற்பயக்கும் நற்பா லவை - இங்கு பயின்று வந்துள்ள எதுகை யாது?**

(A) கூழை எதுகை (B) மேற்கதுவாய் எதுகை
(C) கீழ்க்கதுவாய் எதுகை (D) பொழிப்பு எதுகை

**58. “செல்வத்துப் பயனே ஈதல்” இவ்வாக்கியத்தில் ஈதல் என்பது**

(A) பண்புத்தொகை (B) தொழிற்பெயர்
(C) வினைமுற்று (D) ஆகுபெயர்

**59. பொருத்துக**

| **பட்டியல் I** | **பட்டியல் II** |
|---|---|
| (a) வெண்சீர் வெண்டளை | 1. விளம்முன் நிரை |
| (b) கலித்தொகை | 2. மாமுன்நிரை, விளமுன் நேர் |
| (c) இயற்சீர் வெண்டளை | 3. காய்முன் நிரை வருவது |
| (d) நிரையொன்றாசிரியத்தளை | 4. காய்முன் நேர்வருவது |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

**60. நட – என்ற அடிச்சொல்லுக்கு பெயரெச்சம் காண்க.**

(A) நடந்த (B) நடந்து
(C) நடத்தல் (D) நடந்தான்

**61. பொருள் தேர்க:**

**அங்காப்பு – என்பது**

(A) வாயைப்பிளத்தல் (B) அங்கம் காப்பு
(C) அகம் காத்தல் (D) வாயைத் திறத்தல்

**62. அந்தந்த அடிகளில் உள்ள சொற்களை முன்பின்னாக மாற்றிக் கொள்வது – எவ்வகைப் பொருள்கோள்**

(A) அடிமறி மாற்றுப்பொருள்கோள் (B) அளைமறிபாப்புப் பொருள்கோள்
(C) கொண்டு கூட்டுப் பொருள்கோள் (D) மொழிமாற்றுப் பொருள்கோள்

**63. பிழையற்ற வாக்கியத்தைக் கூறுக**

(A) வயிலில் மாடுகள் மேந்தது (B) வயலில் மாடுகள் மேஞ்சது
(C) வயலில் மாடுகள் மேய்ந்தது (D) வயலில் மாடுகள் மேய்ந்தன

**64. பொருந்தாத சொல்லைத் தேர்வு செய்க**

(A) பெறா அ (B) தழிஇ
(C) அண்ணன் (D) கொடுப்பதூஉம்

**65. பொருத்துக**

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (a) நான்மணிமாலை | 1. கவிதை |
| (b) மலரும் மாலையும் | 2. சிற்றிலக்கியம் |
| (c) நான்மணிக்கடிகை | 3. காப்பியம் |
| (d) தேம்பாவணி | 4. நீதிநூல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

**66. செய்யுளின் எல்லா அடிகளையும் முன்பின்னாக மாற்றிப் பொருள் கொண்டாலும் பொருளும் ஓசையும் சிதையாமல் வருவது – எவ்வகை அணி?**

(A) கொண்டுகூட்டுப் பொருள்கோள் (B) அளைமறிபாப்புப் பொருள்கோள்
(C) அடிமறிமாற்றுப் பொருள்கோள் (D) மொழிமாற்றுப் பொருள்கோள்

**67. திருக்குறளை இயற்றியவர் யார்? என ஆசிரியர் மாணவனிடம் கேட்பது.**

(A) அறிவினா (B) ஐயவினா
(C) அறியாவினா (D) கொளல் வினா

**68. இதழ், நா, பல், அண்ணம் - இவை**

(A) ஒலிப்பு முனைகள் (B) ஒலிப்பான்கள்
(C) ஒலிப்பு முறைகள் (D) ஒலி பிறப்புகள்

**69. சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி, நேரே பொருள் கொள்வது – எவ்வகை அணி**

(A) நிரல்நிறைஅணி (B) ஏகதேச உருவக அணி

(C) வேற்றுமையணி
(D) வேற்றுப்பொருள் வைப்பணி

**70.** **நாமக்கல் கவிஞர் வே. இராமலிங்கம் பிள்ளை இயற்றாத நூல் எது?**
(A) சங்கொலி
(B) தைப்பாவை
(C) தமிழன் இதயம்
(D) அவனும் அவளும்

**71.** **பொருத்தமற்றதைத் தெரிவு செய்க**
(A) சாண்டில்யன் - கடல்புறா
(B) கண்ணதாசன் - இயேசு காவியம்
(C) நா.காமராசன் - வீரகாவியம்
(D) முடியரசன் - ஊன்றுகோல்

**72.** **பொருத்துக**

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (a) சோ. இராமசாமி | 1. நீர்க்குமிழி |
| (b) நா. பார்த்தசாரதி | 2. தேரோட்டிமகன் |
| (c) பி.எஸ். இராமையா | 3. வலம்புரிச் சங்கு |
| (d) கே. பாலச்சந்தர் | 4. மனம் ஒரு குரங்கு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 4 | 2 | 1 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

**73.** **அகரவரிசைப்படி அமைந்துள்ளதைக் கண்டறிக**
(A) மீமிசை, முந்நீர், மொழிபெயர்ப்பு, மேடுபள்ளம், மனத்துயர்
(B) மனத்துயர், மீமிசை, முந்நீர், மேடுபள்ளம், மொழிபெயர்ப்பு
(C) முந்நீர், மீமிசை, மனத்துயர், மொழிபெயர்ப்பு, மேடுபள்ளம்
(D) மனத்துயர், மேடுபள்ளம், முந்நீர், மீமிசை, மொழிபெயர்ப்பு

**74.** **பின்வருவனவற்றைப் பொருத்துக**

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (a) ஊறுகாய் | 1. பண்புத்தொகை |
| (b) மழைக்கை | 2. வினைத்தொகை |
| (c) சாணங்குலம் | 3. உவமைத்தொகை |
| (d) இருபொருள் | 4. உம்மைத்தொகை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 2 | 3 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 2 | 4 | 3 | 1 |

**75.** **பொருத்துக**

| பட்டியல் I –நூல் | பட்டியல் II – ஆசிரியர் |
|---|---|
| (a) மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி | 1. சுவாமிநாத தேசிகர் |
| (b) இலக்கண விளக்கம் | 2. அருணகிரிநாதர் |
| (c) இலக்கண கொத்து | 3. பரஞ்சோதி முனிவர் |
| (d) திருப்புகழ் | 4. வைத்தியநாத தேசிகர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 3 | 1 | 2 | 4 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

**76. ஐங்குறுநூற்றில் முல்லைத் திணைப் பாடல்களைப் பாடியவரின் பெயரைத் தேர்ந்தெடு.**
(A) பேயனார் (B) கபிலர்
(C) ஓதலாந்தையார் (D) ஓரம்போகியார்

**77. 'முட்டையிட்டது சேவலா பெட்டையா'? - இவ்வினாவில் அமைந்துள்ள வழு எது?**
(A) பால்வழு (B) திணை வழு
(C) வினாவழு (D) மரபு வழு

**78. தவறாகப் பிரிக்கப்பட்டுள்ள சொல்லை தேர்ந்தெடுக்கவும்.**
(A) வெண்மதி=வெண்+மதி (B) வெந்துவர்த்து=வெந்து+உவர்ந்து
(C) காடிதனை= காடு+இதனை (D) கருமுகில் = கருமை+முகில்

**79. 'கை' என்னும் சொல்லின் பொருள் பின்வருவனவற்றுள் எது?**
(A) அரண் (B) தராசு (C) ஒப்பனை (D) அருள்

**80. 'மோ' என்னும் சொல்லின் பொருள் பின்வருவனவற்றுள் எது?**
(A) ஏவல் (B) மேகம் (C) மேன்மை (D) மேம்பாடு

**81. சாகித்திய அகாடெமி பரிசு பெற்ற ரா.பி. கேதுப்பிள்ளையின் நூல் எது?**
(A) கள்ளர் சரித்திரம் (B) தமிழ்இலக்கிய வரலாறு
(C) தமிழின்பம் (D) முத்தொள்ளாயிர விளக்கம்

**82. வரை - இவ்வேர்சோல்லை விணையாலணையும் பெயராக்குக.**
(A) வரைதல் (B) வரைந்த (C) வரைந்தவர் (D) வரைந்து

**83. பொருத்துக**

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (a) கனை | 1. அம்பு |
| (b) கணை | 2. தங்கு |
| (c) உறை | 3. கூறு |
| (d) உரை | 4. குரல் ஒலி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 2 | 3 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 4 | 1 | 2 | 3 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

**84. பட்டியல் ஒன்றுடன் பட்டியல் இரண்டைப் பொருத்தி, பட்டியல்களுக்குக் கீழே உள்ள தொகுப்பிலிருந்து சரியான விடையினைத் தெரிவு செய்க.**

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (a) மறுகு | 1. இடை |
| (b) மருங்கு | 2. குழந்தை |
| (c) மதுரம் | 3. அரசவீதி |
| (d) மதலை | 4. இனிமை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| (C) | 3 | 2 | 1 | 4 |
| (D) | 1 | 4 | 3 | 2 |

**85. பொதுப் பொருளால் சிறப்புப் பொருளையும், சிறப்புப் பொருளால் பொதுப் பொருளையும் விளக்குவதனை – எந்த அணி என்பர்?**

(A) ஏகதேச உருவக அணி (B) வேற்றுப்பொருள் வைப்பணி
(C) வேற்றுமையணி (D) இல்பொருள் உவனையணி

**86. "அளவில் சனம் உளமனைய குளம் நிறைந்த வளமருவும்" தொடரில் அடிக்கோடிட்ட எழுத்துகள் குறிப்பது?**

(A) மோனை (B) முரண் (C) இயைபு (D) எதுகை

**87. பொருள் கோள் வகைகளின் எண்ணிக்கை**

(A) *4* (B) *6* (C) *8* (D) *10*

**88. அந்தந்த அடிகளில் உள்ள சொற்களை முறைமாற்றாமல், வரிசையாக அமைத்துப் பொருள் கொள்வது – எவ்வகைப் பொருள்கோள்?**

(A) ஆற்றுநீர்ப்பொருள்கோள் (B) அளைமறிபாப்புப் பொருள்கோள்
(C) நிரல்நிறைப் பொருள்கோள் (D) மொழிமாற்றுப் பொருள்கோள்

**89. மார்பு, கழுத்து, தலை, மூக்கு - இவை**

(A) முயற்சிப் பிறப்பு (B) ஒலிப்பு முனைகள்
(C) காற்றறைகள் (D) ஒலிப்பான்கள்

**90. கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானதைத் தேர்ந்தெடு**

I. குறுந்கொகை வாயிலாக பண்டைத்தமிழரின் இல்வாழக்கை, ஒழுக்கம், மகளிர் மாண்பு, அறவுணர்வு முதலியவற்றை அறியலாம்.

II. குறுந்தொகையில் புறப்பொருள் பற்றிய பாடல்களைப் பல்வேறு காலத்தில் வாழ்ந்தப் புலவர்கள் பாடியுள்ளனர்.

III. குறுந்தொகை குறைந்த அளவாக நான்கடிகளையும் அதிக அளவாக எட்டு அடிகளையும் கொண்டிருக்கின்றன.

IV. கிறித்தவக் கம்பன் எனப் புகழ்பெற்ற கவிஞர் எச். எ. கிருட்டினன்.

(A) I & II (B) I, III & IV (C) I, II & III (D) அனைத்தும் சரி

**91. "எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்' இந்த அடியில் அமைந்துள்ள மோனை வகையைத் தேர்ந்தெடு**

(A) கீழ்க்கதுவாய் (B) இணை
(A) கூழை (D) மேற்கதுவாய்

**92. பொருந்தா இணையைக் கண்டறிக**
(A) சுவடி – நூல் (B) வெய்யோன் - திங்கள்
(C) செட்டு – சிக்கனம் (D) சிந்தை – உள்ளம்

**93. "வீணா கானம் விடியுமுன் கேட்டது – கர்ணாமிர்தம் காதுக்கு இனிமை" என்பது யாருடைய சிறு வயது பாடல்**
(A) கல்கி (B) கல்யாணசுந்தரம்
(C) அண்ணா (D) கண்ணதாசன்

**94. நாடகக்காரி – என்னும் நூலை எழுதியவர்.**
(A) கல்யாண சுந்தரம் (B) கல்கி
(C) அண்ணா (D) கண்ணதாசன்

**95. தமிழியக்கம் - என்னும் நூலை எழுதியவர்.**
(A) பாரதிதாசன் (B) அண்ணா
(C) திரு.வி.க (D) கல்கி

**96. பொருத்துக**
(a) வேப்பங்கொழுந்து — 1. சீதபேதி குணமாகும்
(b) அகத்திக்கீரை — 2. இருமலைப் போக்கும்
(c) முசுமுசுக்கை — 3. மார்புச்சளிநீங்கும்
(d) கறிவேப்பிலை — 4. பல்சார்ந்த நோய் குணமாகும்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 3 |
| (B) | 3 | 2 | 1 | 4 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

**97. தவறானவற்றை தெரிவு செய்க**
(A) கார்ப்பு – உணர்வு (B) உவர்ப்பு – ஆற்றல்
(C) கைப்பு – மென்மை (D) புளிப்பு - இனிமை

**98. இன்னதென அறிகில்லார் தாம் செய்வ திவர்பிழையை**
**மன்னியுமென் றெழிற் <u>கனிவாய்</u> மலர்ந்தார்நம் அருளல் வள்ளல் - என்னும் பாடல் வரியில் கோடிட்ட சொல் எவ்வகை தொகை?**
(A) வினைத்தொகை (B) உவமைத்தொகை
(C) உம்மைத்தொகை (D) பண்புத்தொகை

**99. ஞானப்பச்சிலை என் வள்ளலார் போற்றும் இலை எது?**
(A) கீழாநெல்லி (B) துளசி
(C) சிங்கவல்லி (D) குப்பைமேனி

**100. வையக மெல்ல மெமதென் றெழுதுமே**
**மொய்யிலை வேல் <u>மாறன்களிறு</u> - இப்பாடல் வரியில் <u>மாறன்களிறு</u> எவ்வகைத் தொகை?**
(A) நான்காம் வேற்றுமைத்தொகை (B) ஆறாம் வேற்றுமைத்தொகை
(C) பண்புத்தொகை (D) உவமைத் தொகை

**101. "Unnati Credit Card" was introduced by ____________**
(A) State Bank of India (B) Indian Bank
(C) Canara Bank (D) Axis Bank

**"உன்னதி கிரெடிட் கார்டை" அறிமுகப்படுத்தியது _____________ ஆகும்**
(A) State Bank of India (B) Indian Bank
(C) Canara Bank (D) Axis Bank

**102. Which is the India's first Cashless Village?**
(A) Pachora (B) Buldana
(C) Dhasai (D) Karajast

**இந்தியாவின் முதல் பணமற்ற கிராமம் எது?**
(A) பச்சோரா (B) புல்தானா
(C) தாஸை (D) கார்ஜத்

**103. Which is the India's First Digital Village?**
(A) Visvadar (B) Bilkha
(C) Akodara (D) Kamlapur

**இந்தியாவின் முதல் டிஜிட்டல் கிராமம் எது?**
(A) விஸ்வதார் (B) மில்கா
(C) அகோதரா (D) கம்லாபூர்

**104. SURYA KIRAN – XI exercise was conducted in _________ State**
(A) Uttarpradesh (B) Bihar
(C) Himachal Pradesh (D) Uttarkhand

**SURYA KIRAN – XI பயிற்சி ____________ மாநிலத்தில் நடத்தப்பட்டது.**
(A) உத்திரபிரதேசம் (B) பீகார்
(C) ஹிமாச்சல பிரதேசம் (D) உத்தரகாண்ட்

**105. Where was the India's First Vertical Gardin Constructed?**
(A) Bangalore (B) Pune (C) Surat (D) Hyderabad

**இந்தியாவின் முதல் செங்குத்துத் தோட்டம் எங்கு அமைக்கப்பட்டுள்ளது?**
(A) பெங்களூரு (B) பூனே (C) சூரத் (D) ஹைதராபாத்

**106. Who is the 21st Law Commission's Chairman?**
(A) P.V. Reddi (B) D.K. Jain
(C) A.P. Shah (D) B.S. Chauhan

**21-வது சட்டக்குழுவின் தலைவர் யார்?**

(A) பி.வி. ரெட்டி (B) டி.கே. ஜெயின்

(C) எ.பி. ஷா (D) பி.எஸ். சவுகான்

**107. Where was 9th World Environmental Education congress held?**

(A) Montreal (B) Vancouver

(C) Ottawa (D) Toronto

**9-வது உலக சுற்றுச்சுழல் கல்வி காங்கிரஸ் எங்கு நடத்தப்பட்டது?**

(A) மான்ட்ரியல் (B) வான்கவர்

(C) ஓட்டாவா (D) டொரண்டோ

**108. In Which state the Jat Agitation did happen?**

(A) Harayana (B) Rajasthan

(C) Punjab (D) Uttar Pradesh

**ஜாட் போராட்டம் எந்த மாநிலத்தில் நடந்தது?**

(A) ஹரியானா (B) ராஜஸ்தான்

(C) பஞ்சாப் (D) உத்திரபிரசேதம்

**109. Which is the first train indigenously made by India?**

(A) Antodaya (B) Humsafar

(C) Medha (D) Uday

**உள்நாட்டிலேயே முழுவதும் உருவாக்கப்பட்ட இந்தியாவின் முதல் இரயில் எது?**

(A) ஆந்தோதயா (B) ஹம்ஸா·.பார்

(C) மேதா (D) உதய்

**110. Who is the father of Indian Meteorology?**

(A) Dev Raj Sikk (B) Mukundaj Raj

(C) Arjun Desai (D) Paramsingh

**இந்திய வானிலை ஆய்வின் தந்தை யார்?**

(A) தேவ்ராஜ் சிக்கா (B) முகுந்தன்ராஜ்

(C) அர்ஜீன் தேசாய் (D) பரம்சிங்

**111. Al Nagah-II exercise was conducted between _______ and ________ countries.**

(A) India, Indonesia (B) India, Saudi Arabia

(C) India, Yemen (D) India, Omen

**Al Nagah-II பயிற்சி ___________ மற்றும் ____________ நாடுகளுக்கு இடையே நடத்தப்பட்டது.**

(A) இந்தியா, இந்தோனேசியா (B) இந்தியா, சவுதி அரேபியா

(C) இந்தியா, ஏமன் (D) இந்தியா, ஓமன்

**112. Which is the India's first carbon neutral district?**

(A) Chirang (B) Majuli

(C) Jorhat (D) Karbi Anglong

***இந்தியாவின் முதல் கார்பன் சமநிலை மாவட்டம் எது?***

(A) சிராங் (B) மஜீலி

(C) ஜோர்ஹாட் (D) கார்பிஆங்லாங்

**113. What is the 2016th year rank of Human Development Index, report for India?**

(A) 128 (B) 131 (C) 130 (D) 132

***இந்தியாவுக்கான 2016 ஆம் ஆண்டின் வளர்ச்சி அறிக்கையின் இடம் என்ன?***

(A) 128 (B) 131 (C) 130 (D) 132

**114. Which bank Introduced the Mera Mobile application for village people?**

(A) ICICI Bank (B) HDFC Bank

(C) Indus Ind Bank (D) Axis Bank

**Mera Mobile எனும் வங்கிச் செயலியை கிராமப்புற மக்களுக்காக அறிமுகப்படுத்திய வங்கி எது?**

(A) ICICI வங்கி (B) HDFC வங்கி

(C) Indus Ind வங்கி (D) Axis வங்கி

**115. India signed the Social Security related agreement with __________ country.**

(A) China (B) Brazil (C) Russia (D) South Africa

**இந்தியா சமூக பாதுகாப்பு தொடர்பான ஒப்பந்தத்தில் __________ நாட்டுடன் கையெழுத்திட்டது.**

(A) சீனா (B) பிரேசில் (C) ரஷ்யா (D) தென்ஆப்பிரிக்கா

**116. Krishi Unnati Mela was conducted in _______________**

(A) Pune (B) New Delhi (C) Bhubaneshwar (D) Bhopal

**கிரிஷி உன்னதி மேளா ___________ இல் நடத்தப்பட்டது.**

(A) பூனே (B) புது தில்லி (C) புவனேஷ்வர் (D) போபால்

**117. Who was recently appointed as the India's press council chairman?**

(A) C.K. Prasad (B) P B Sawant

(C) A.N. Sen (D) M. Katju

***அண்மையில் இந்திய பத்திரிக்கை கவுன்சில் தலைவராக நியமிக்கப்பட்டவர் யார்?***

(A) சி.கே. பிரசாத் (B) பி. பி. சவந்த்

(C) எ. என். சென் (D) எம். கட்ஜீ

**118. Madhukar Gupta Committee is related to _________.**

(A) Special Task force (B) Haj Policy

(C) Girls Education (D) Border Security

**மதுக்கர் குப்தா குழு உடன் __________ தொடர்புடையது.**

(A) சிறப்புப்படை பிரிவு (B) ஹஜ் பயணக் கொள்கை

(C) பெண்குழந்தைகள் கல்வி (D) எல்லைப்பாதுகாப்பு

**119. Who has sworn as the chief minister of Manipur?**

(A) Lal Thanwala (B) N. Biren Singh

(C) Mugul Sungma (D) sarbanandha Sanawal

**மணிப்பூரின் முதல்வராக பதிவயேற்று இருப்பவர் யார்?**

(A) லால் தான்வாலா (B) என். பிரேன் சிங்

(C) முகுல் சங்மா (D) சர்பானந்தா சோனாவால்

**120. Who is the current chief Economic Advisor of Central Government?**

(A) Kaushik Basu (B) Urjit Patel

(C) Aravind Subramaniam (D) Raguram Rajan

**மத்திய அரசுக்கான தற்போதைய தலைமை பொருளாதார ஆலோசகர் யார்?**

(A) கௌசிக் பாசு (B) உர்ஜித் படேல்

(C) அரவிந்த சுப்பிரமணியம் (D) ரகுராம் ராஜன்

**121. Where was the International Yoga festival of 2017 conducted?**

(A) Delhi (B) Shimla (C) Lucknow (D) Dehradun

***2017 ஆம் ஆண்டுக்கான சர்வதேச யோகா விழா எங்கு நடத்தப்பட்டது?***

(A) டெல்லி (B) சிம்லா (C )லக்னோ (D) டேராடூன்

**122. Where was the International conference on e-governance for the year of 2017 held?**

(C) Mumbai (B) Chennai (C) Delhi (D) Kolkatta

***2017 ஆம் ஆண்டுக்கான சர்வதேச மின்ஆளுமை மாநாடு எங்கு நடந்தது?***

(A) மும்பை (B) சென்னை (C) டெல்லி (D) கொல்கத்தா

**123. Which is the world's very oldest aircraft carrier warship?**

(A) INS Vikramatitya (B) INS Virat

(C) INS Vikranth (D) INS Katheri

**உலகின் மிகவும் பழமைவாய்ந்த விமானம் தாங்கி போர்கப்பல் எது?**

(A) INS விக்கரமாதித்தியா (B) INS விராட்

(C) INS விக்ராந்த் (D) INS கந்தேரி

**124. "SWATHI" is a _____________.**

(A) Aircraft (B) Missile

(C) Weapon Locator (D) Helicopter

**"ஸ்வாதி" என்பது ஒரு ________________.**

(A) விமானம் (B) ஏவுகணை

(C) ஆயதம் கண்டறியும் கருவி (D) ஹெலிகாப்டர்

**125. Where is the Defence Metellnegical research laboratory located?**

(A) Chennai (B) Bangalore

(C) Hyderabad (D) Mumbai

**பாதுகாப்புத் துறைக்கான தனிமங்கள் ஆராய்ச்சி சோதனைக் கூடம் எங்கு அமைந்துள்ளது?**

(A) சென்னை (B) பெங்களூரு

(C) ஹைதராபாத் (D) மும்பை

Saidai Sa. Duraisamy's
Manidhanaeyam Free IAS Academy
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st main Road, CIT Nagar, Chennai-35 (HO)
A-Block Old No.A9 New No. A 41, 6th Street,
Anna Nagar East, Chennai – 600 102
E Mail Address : anmanidhanaeyam@gmail.com
Website : saidais.com

# TNPSC GROUP – 2A – TEST – 6 (ANSWER KEY)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. B | 21. B | 41. C | 61. A | 81. C | 101. A | 121. A |
| 2. B | 22. A | 42. B | 62. D | 82. C | 102. C | 122. C |
| 3. B | 23. B | 43. B | 63. D | 83. C | 103. C | 123. B |
| 4. D | 24. B | 44. C | 64. C | 84. A | 104. D | 124. C |
| 5. C | 25. C | 45. B | 65. A | 85. B | 105. A | 125. C |
| 6. A | 26. C | 46. C | 66. C | 86. D | 106. D | |
| 7. B | 27. C | 47. C | 67. A | 87. C | 107. B | |
| 8. C | 28. B | 48. A | 68. A | 88. C | 108. A | |
| 9. C | 29. B | 49. B | 69. A | 89. C | 109. C | |
| 10. A | 30. B | 50. A | 70. B | 90. B | 110. A | |
| 11. B | 31. C | 51. B | 71. C | 91. A | 111. D | |
| 12. D | 32. C | 52. B | 72. B | 92. B | 112. B | |
| 13. C | 33. B | 53. A | 73. B | 93. D | 113. B | |
| 14. B | 34. C | 54. B | 74. B | 94. B | 114. A | |
| 15. D | 35. B | 55. C | 75. C | 95. A | 115. B | |
| 16. C | 36. A | 56. B | 76. A | 96. C | 116. B | |
| 17. C | 37. D | 57. B | 77. C | 97. B | 117. A | |
| 18. B | 38. D | 58. B | 78. A | 98. B | 118. D | |
| 19. C | 39. C | 59. D | 79. C | 99. C | 119. B | |
| 20. B | 40. D | 60. A | 80. A | 100. B | 120. C | |